සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- ※ பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- ※ பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ※ பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- ※ பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 40 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| பகுதி III | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணித பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. தொலையுணர்வு (Remote Sensing) செயன்முறையில் காணப்படும் நிலைகளின் சரியான ஒழுங்குவரிசை,
   (1) சக்தி மூலம், புவிமேற்பரப்பு பொருட்கள், செய்மதி, செயன்முறை நிலையம், பகுப்பாய்வு
   (2) செய்மதி, செயன்முறை நிலையம், பகுப்பாய்வு, சக்தி மூலம், புவிமேற்பரப்பு பொருட்கள்
   (3) சக்தி மூலம், செயன்முறை நிலையம், பகுப்பாய்வு, புவிமேற்பரப்பு பொருட்கள், செய்மதி
   (4) பகுப்பாய்வு, செய்மதி, சக்தி மூலம், புவிமேற்பரப்பு பொருட்கள், செயன்முறை நிலையம்
   (5) சக்தி மூலம், செயன்முறை நிலையம், புவிமேற்பரப்பு பொருட்கள், பகுப்பாய்வு, செய்மதி (....)

2. புவியியல் தகவல் முறைமையின் (GIS) ஒரு சோடி உள்ளீட்டுச் சாதனங்கள் என்ன?
   (1) இலக்கமாக்கல் மேசை மற்றும் அச்சுப்பொறி
   (2) அச்சுப்பொறி மற்றும் காந்த வட்டு
   (3) இலக்கமாக்கல் மேசை மற்றும் காட்சிப்படுத்தல்
   (4) அச்சுப்பொறி மற்றும் வருடி
   (5) வருடி மற்றும் இலக்கமாக்கல் மேசை (......)

3. புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் திறந்த மூல மென்பொருள் ஒன்று,
   (1) ArcGIS. (2) Global Mapper. (3) QGIS.
   (4) MapInfo. (5) Intergraph. (......)

4. 1:25 000 அளவுத்திட்ட இடவிளக்கப் படமொன்றில் எடுத்துக்காட்டப்படும் நீர்ப்பாசனக் கால்வாய் ஒன்றின் நீளம் 12 சென்ரி மீற்றராகும். இதன் உண்மையான நீளம் எத்தனை கிலோ மீற்றர்?
   (1) 2 (2) 3 (3) 4 (4) 6 (5) 12 (......)

5. 1:50 000 இடவிளக்கப் படமொன்றில் சமவுயரக் கோடுகளினால் எடுத்துக்காட்டப்படும் மூன்று நிலவுருவ அம்சங்கள்,
   (1) மேட்டு நிலம், மலைத் தொடர் மற்றும் குத்துச்சாய்வு
   (2) மியாந்தர், நீர்ப்பிரிநிலம் மற்றும் குத்துச்சாய்வு
   (3) மியாந்தர், மலைத்தொடர் மற்றும் மரநிகர் வடிகால் பாங்கு
   (4) குவிவுச் சாய்வு, ஆற்று முகம் மற்றும் பின்னலருவி
   (5) பின்னலருவி, நீர்ப்பிரிநிலம் மற்றும் ஆற்று முகம் (......)

6. ஏதாவதொரு வானிலை நிலைய அமைவிடத்தின் மாதச் சராசரி வெப்பநிலை, மாதத்தின் அதி உயர் வெப்பநிலை மற்றும் மாதத்தின் இழிவு வெப்பநிலை ஆகியவற்றின் பெறுமானங்களை எடுத்துக்காட்டுவதற்குப் பொருத்தமானதொரு வரைபு முறை,
   (1) கூட்டு பார் வரைபு (2) பல்கோட்டு வரைபு
   (3) வட்ட (pie) வரைபு (4) பல் பார் வரைபு
   (5) எளிய கோட்டு வரைபு (......)

7. 1:50 000 அளவுத்திட்டத்திலுள்ள இடவிளக்கப் படமொன்றில் அளவுத்திட்டம் இல்லாது எடுத்துக்காட்டப்படும் அம்சம் யாது?
   (1) ஏரி (2) பிரதான ஆறு (3) நெல் நிலம்
   (4) கட்டடம் (5) வன ஒதுக்கு (......)

8. இடஞ்சார் தரவுக்கான ஓர் உதாரணம்,
   (1) கிராமமொன்றின் கிணற்று நீரின் தரம்
   (2) கிராமமொன்றில் வீடுகளின் பரம்பல்
   (3) கிராமமொன்றின் மொத்தக் குடித்தொகை
   (4) கிராமிய மக்களின் வருமான மூலங்கள்
   (5) கிராமிய மக்களின் கல்வி மட்டம் (......)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

9. பண்புத் தரவுகளின் இரண்டு வகைகளை எடுத்துக்காட்டும் தெரிவு எது?
   (1) மகா பருவத்தில் நெல் அறுவடை, விவசாயிகளின் உளப்பாங்குகள்
   (2) பாறைத்தொடரின் பரம்பல், மலை உச்சிகளின் எண்ணிக்கை
   (3) மலைத்தொடரின் அழகு, வெள்ளப்பெருக்குகளின் அவதானிப்பு
   (4) பட உருவாக்கல் திறன், புவியியலைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை
   (5) நீர்ப்பிரிநிலத்தின் இயல்பு, பிரதேசமொன்றின் பரப்பு (......)

10. தரவுப் பரம்பலொன்றின் ஆகாரம் என்பது,
   (1) இடையிலும் பார்க்க அதிக பெறுமானம் கொண்டது.
   (2) குறைந்தளவான மீடிறன் பெறுமானத்தைக் கொண்டது.
   (3) இடையத்திலும் பார்க்க பெரிய பெறுமானத்தைக் கொண்டது.
   (4) உயர்ந்தளவான மீடிறன் பெறுமானத்தைக் கொண்டது.
   (5) இடையத்திற்குச் சமமான பெறுமானத்தைக் கொண்டது. (......)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**11.** பாறைக் குழம்பு குளிர்ச்சியடைதல் மற்றும் திண்மமாதல் ஊடாக உருவாக்கப்படும் பாறை வகை எது?
(1) அடையல் பாறை (2) தீப்பாறை
(3) உருமாறிய பாறை (4) சுண்ணத்துக்குரிய பாறை
(5) மிகையுப்பு மூலப் பாறை (......)

**12.** உலகில் காணப்படும் மொத்த நீர் வளங்களுள் நன்னீராகக் கருதப்படுவது எத்தனை சதவீதம்?
(1) 1.5% (2) 2.5% (3) 9.5% (4) 32.5% (5) 67.5% (......)

**13.** பனிக்கட்டியாற்றுச் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் தின்னல் நிலவுருவம் ஒன்றினையும் படிவுக்குரிய நிலவுருவம் ஒன்றினையும் முறையே எடுத்துக்காட்டும் தெரிவு எது?
(1) சிறுமலையேரி மற்றும் தொங்கு பள்ளத்தாக்கு
(2) அறைபாறைக் களி மற்றும் படிவுத்திட்டை
(3) அலையும் பாறை மற்றும் நீள்மணற்குன்று
(4) வட்டக்குகை மற்றும் நீள்குன்று
(5) கூர்முடி மற்றும் U-வடிவப் பள்ளத்தாக்கு (......)

**14.** காலநிலை மற்றும் வானிலையை வேறுபடுத்திக் காட்டும் சரியான தெரிவு எது?
(1) காலநிலை என்பது குறுங்கால வளிமண்டல நிலைமையைக் குறிப்பிட, வானிலை என்பது நீண்ட காலப் பாங்குகளை விவரிக்கின்றது.
(2) காலநிலை என்பது வளிமண்டலத் தோற்றப்பாட்டின் நீண்ட காலச் சராசரி, வானிலை என்பது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடமொன்றின் வளிமண்டல நிலைமையைக் குறிக்கின்றது.
(3) வானிலை என்பது வளிமண்டலத்தின் முழு நிலைமைகளையும் குறிக்கும்போது, காலநிலை என்பது நாளாந்த நிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றது.
(4) காலநிலை என்பது வளிமண்டலத்தின் நாளாந்த நிலைமையினை விவரிக்கும், வானிலை என்பது வருடாந்தச் சராசரியைப் பிரதிபலிக்கும்.
(5) காலநிலையும் வானிலையும் ஒன்றுக்கொன்று மாற்றீடான பதங்கள், இரண்டும் வளிமண்டலத்தின் பொதுவான நிலையினை விவரிக்கின்றது. (......)

**15.** தலையீட்டு எரிமலை நிலவுருவம் ஒன்றுக்கான ஓர் உதாரணம்,
(1) எரிமலைச் சாம்பற் கூம்பு.
(2) எரிமலைக் குழம்புப் பாய்ச்சல்.
(3) எரிமலைப் பெருவாய்.
(4) எரிமலைவாய் ஏரி.
(5) பெருங்கற் குழம்பு. (......)

**16.** உயிரினக் கூட்டம் என்பதனைச் சரியாக வரையறை செய்வது எது?
(1) ஒரு சிறிய, உள்ளூருக்குரிய தனிச்சிறப்பான இனங்களைக் கொண்ட சூழல்தொகுதி.
(2) மழைக் காடுகளில் மாத்திரம் காணப்படும் ஒரு தாவர வகையாகும்.
(3) தனியொரு கண்டத்துக்குள்ளே காணப்படும் ஒரே வகையான சூழல்தொகுதிகளின் திரட்டு.
(4) ஆழமற்ற சமுத்திர நீரில் மட்டுமே காணப்படும் தனித்தன்மையான ஒரு சூழல்தொகுதி
(5) குறிப்பிட்ட காலநிலைப் பிரதேசமொன்றின் தாவரங்கள் மற்றும் விலங்குகள் சமுதாயம் (......)

**17.** படிவுவீழ்ச்சியின் நான்கு வடிவங்களை மாத்திரம் எடுத்துக் காட்டும் தெரிவு எது?
(1) உறைபனி, புகார், பனி, ஈரப்பதன் (2) மழை, ஈரப்பதன், பனி, ஆலி
(3) முகில்கள், ஆலி, பனி, புகார் (4) உறைபனி, புகார், பனி, ஆலி
(5) புகார், பனி, ஆலி, ஈரப்பதன் (......)

**18.** இலங்கையின் காலநிலையைத் தீர்மானிக்கும் மூன்று உள்ளூர்க் காரணிகளை எடுத்துக் காட்டும் தெரிவு எது?
(1) ஒரு தீவாக இருத்தல், கடலிலிருந்து தூரம், குத்துயரம்
(2) நீர் மேற்பரப்புக்கள், குத்துயரம், அகலக்கோட்டு ரீதியான அமைவிடம்
(3) தரைத்தோற்றம், குத்துயரம், இடை அயன ஒருங்கல் வலயம்
(4) காட்டுப் போர்வை, அகலக்கோட்டு ரீதியான அமைவிடம், தரைத்தோற்றம்
(5) தீவாக இருத்தல், குத்துயரம், இந்திய உபகண்டத்தின் செல்வாக்கு (......)

19. காற்றின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் மூன்று அரித்தல் நிலவுருவங்களை உள்ளடக்கும் தெரிவு எது?
(1) தளத்திடைக் குன்று, தனியோங்கல், கூர்முடி
(2) மணற் குன்றுகள், தளத்திடைக் குன்று, வாடி
(3) நட்சத்திரக் குன்று, தனியோங்கல், பானைக்குழிவு
(4) பீடக்கிடைத் திணிவு, தட்டையுச்சி ஓங்கல், நீள்குன்று
(5) இயாடங்கு, தளத்திடைக் குன்று, பீடக்கிடைத்திணிவு (……)

20. மத்தியதரை உயிரினக் கூட்டத்தில் காணப்படும் தாவரத்தின் பிரதான பண்புகளில் ஒன்று,
(1) முதன்மையான மரங்களின் உயரம் ஏறக்குறைய 25 - 30 மீற்றர்களாக இருத்தலாகும்.
(2) பெரும்பாலான தாவரங்கள் இலையுதிர் வகைக்குரியவையாக இருத்தலாகும்.
(3) மாரிப் பருவத்தில் இலைகள் வீழ்ச்சியடைதலாகும்.
(4) உயிரினப் பல்வகைமை குறிப்பிடத்தக்களவில் உயர் மட்டத்தில் இருத்தலாகும்.
(5) தரை நீர், ஆழமான வேர்த் தொகுதிகளினால் உறிஞ்சப்படுதலாகும். (……)

21. சிலிக்கனை 55 % க்குக் குறைவாகவும், இரும்பினை ஏறக்குறைய 45 % ஆகவும் இரசாயனச் சேர்க்கையாகக் கொண்டிருக்கும் இரண்டு தீப்பாறை வகைகளைக் கொண்டிருக்கும் தெரிவு யாது?
(1) கப்புரோ மற்றும் எரிமலைக்குழம்புப் பாறை
(2) அன்டிசைட் மற்றும் டியோறைட்
(3) பெரிட்டோரைட் மற்றும் எரிமலைக்குழம்புப் பாறை
(4) கருங்கல் மற்றும் ஒப்சிடியன்
(5) சிலிக்கேட் மற்றும் குளோறைட் (……)

22. காலநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கும் இரண்டு இயற்கைக் காரணிகளாவன,
(1) காடழிப்பு மற்றும் சமுத்திர நீரின் வெப்பநிலை அதிகரிப்பு ஆகும்.
(2) எரிமலைச் செயற்பாடு மற்றும் சுவட்டு எரிபொருள் எரிவு ஆகும்.
(3) பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் லாநினா செயற்பாடு ஆகும்.
(4) சூரியப் புள்ளிகளின் நிகழ்வு மற்றும் எரிமலைச் செயற்பாடு ஆகும்.
(5) விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் காட்டுத் தீ ஆகும். (……)

23. இலங்கையின் வட மத்திய மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் பரம்பிக் காணப்படும் பிரதான மண் வகை
(1) செம்மஞ்சள் பொட்சோல் மண்
(2) செங்கபில லட்டோசோல்ஸ்
(3) செங்கபில மண்
(4) குறுமுசோல்ஸ்
(5) றெகோசோல்ஸ் (……)

24. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின்படி அயன சவன்னாக் காலநிலை காணப்படும் இரண்டு பகுதிகள்,
(1) தாய்லாந்து மற்றும் மடகஸ்காரின் வடமேற்கு கரை ஆகும்.
(2) மியன்மார் மற்றும் ஆபிரிக்கா கண்டத்தில் லைபீரியா ஆகும்.
(3) கொங்கோ வடிநிலம் மற்றும் கரீபியன் தீவுகள் ஆகும்.
(4) கிழக்கு மடகஸ்கார் மற்றும் கிழக்கு பிறேசில் ஆகும்.
(5) இந்தியாவின் டெக்கான் பிரதேசம் மற்றும் சியரா லியோன் ஆகும். (……)

25. இலங்கையின் இரண்டு தேசிய பூங்காக்கள்,
(1) ரன்ரம்பே, புந்தல ஆகும்.
(2) உடவளவை, ரன்தெனிகல ஆகும்.
(3) வில்பத்து, வஸ்கோமுவ ஆகும்.
(4) விக்டோரியா, மின்னேரியா ஆகும்.
(5) கிரித்தல, ஹோட்டன் சமவெளி ஆகும். (……)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

26. பருமட்டான பிறப்பு வீதத்திற்கும், பருமட்டான இறப்பு வீதத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக குடித்தொகையில் ஏற்படும் மாற்றத்தினைச் சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு எது?
(1) எதிர்கணியக் குடித்தொகை வளர்ச்சி
(2) குடித்தொகை வளர்ச்சி
(3) நேர்கணியக் குடித்தொகை வளர்ச்சி
(4) இயற்கை வளர்ச்சி
(5) அடுக்குக் குடித்தொகை வளர்ச்சி (……)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

27. இரண்டாம்நிலைப் பொருளாதார நடவடிக்கை மற்றும் மூன்றாம்நிலைப் பொருளாதார நடவடிக்கை ஒவ்வொன்றினையும் முறையே கொண்டிருக்கும் தெரிவு எது?
(1) சுரங்கமறுத்தல் மற்றும் இரும்புருக்குக் கைத்தொழில்
(2) புடவைக் கைத்தொழில் மற்றும் போக்குவரத்து
(3) விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில்
(4) வங்கியியல் சேவைகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்
(5) வர்த்தகம் மற்றும் போக்குவரத்து (......)

28. 0-14 வயதுடைய மக்களினதும் 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மக்களினதும் எண்ணிக்கையை 15 - 64 வயதுடைய மக்களின் எண்ணிக்கையினால் பிரிப்பதனை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பதம் எது?
(1) வயது முதிர்ந்தோர் தங்கியிருத்தல் விகிதம்
(2) தொழிலாளர் படை
(3) வயது - பால் விகிதம்
(4) தங்கியிருத்தல் விகிதம்
(5) பிள்ளை - வயது வந்தோர் விகிதம் (......)

29. விவசாய நிலத்தின் மீது உயர் குடித்தொகை அமுக்கம் காணப்படும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விவசாய வகை எது?
(1) பண்டைக்கால வாழ்க்கைப் பயிர்ச்செய்கை
(2) வர்த்தகரீதியான தானிய விவசாயம்
(3) செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கை
(4) பெருந்தோட்ட விவசாயம்
(5) பரும்படியான வாழ்க்கைப் பயிர்ச்செய்கை (......)

30. ஆறு அல்லது கால்வாய் நெடுகிலும் விருத்தி செய்யப்பட்டுள்ள குடியிருப்புப் பாங்கினைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பெயர் யாது?
(1) கொத்துக் குடியிருப்பு (2) வட்டமான குடியிருப்பு
(3) நேர்கோட்டுக் குடியிருப்பு (4) சிதறல் குடியிருப்பு
(5) கருவடிவக் குடியிருப்பு (......)

31. குடிப்புள்ளியியல் நிலைமாற்றத்தின் பின்விரிவாக்க நிலைக் காலத்தில்,
(1) பிறப்பு வீதமானது இறப்பு வீதத்திலும் பார்க்க குறைவாக இருக்கும்.
(2) இறப்பு வீதம் வீழ்ச்சியடையத் தொடங்கும் ஆனால் பிறப்பு வீதம் மாற்றமடையாது இருக்கும்.
(3) பிறப்பு வீதமும், இறப்பு வீதமும் தாழ்வான மட்டத்தில் காணப்படும்.
(4) பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் உயர் மட்டத்தில் இருக்கும்.
(5) இறப்பு வீதம் மேலும் வீழ்ச்சியடையும், பிறப்பு வீதம் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கும். (......)

32. பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தமது கைத்தொழில்களை ஸ்தாபித்து வருகின்றமைக்கான காரணம்,
(1) வறிய நாடுகளின் பொருளாதாரங்களை விருத்தி செய்வதற்கான விருப்பமாகும்.
(2) தமது தாய் நாடுகளில் காணப்படும் பொருளாதாரக் கொள்கைகள் சாதகமற்றதாகக் காணப்படுதலால் ஆகும்.
(3) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருத்தமான கைத்தொழில் தொழில்நுட்பங்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பதாலாகும்.
(4) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலுள்ள பெருமளவிலான முதலீட்டாளர்கள் தமது பணத்தினை முதலீடு செய்ய விரும்புகின்றமையாலாகும்.
(5) உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதினால் பெருமளவு இலாபத்தினைப் பெற்றுக்கொள்ள முடிவதாலாகும். (......)

33. தென் ஆசிய நாடுகளிடையே இலங்கை மிக உயர்வான மானிட அபிவிருத்திச் சுட்டெண் பெறுமானத்தினைக் கொண்டுள்ளது. அதற்கான பிரதான காரணம்,
(1) நாட்டின் நிர்வாக முறைமையில் காணப்படும் பன்முகப்படுத்தல் ஆகும்.
(2) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடித்தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் ஆகும்.
(3) அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுகநலன் அபிவிருத்திக் கொள்கைகள் ஆகும்.
(4) நாட்டில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் ஆகும்.
(5) இறக்குமதி - ஏற்றுமதிப் பொருளாதார முறைமையின் அறிமுகம் ஆகும். (......)

34. மானிடப் புவியியலின் மூன்று உப-பிரிவுகளை எடுத்துக்காட்டும் தெரிவு எது?
(1) கிராமியப் புவியியல், குடியிருப்புப் புவியியல், விவசாயப் புவியியல்
(2) போக்குவரத்துப் புவியியல், விவசாயப் புவியியல், மண் புவியியல்
(3) விவசாயப் புவியியல், மண் புவியியல், கைத்தொழில் புவியியல்
(4) உயிரினப் புவியியல், மண் புவியியல், அபிவிருத்திப் புவியியல்
(5) வரலாற்றுப் புவியியல், உயிரினப் புவியியல், கைத்தொழில் புவியியல் (......)

35. மூன்று பிரதான குடித்தொகைச் செறிவுகளைக் கொண்ட கண்டம் எது?
(1) தென் அமெரிக்கா
(2) ஆபிரிக்கா
(3) வட அமெரிக்கா
(4) ஐரோப்பா
(5) ஆசியா (......)

36. இலங்கையின் ஈரவலயத்தில் அமைந்துள்ள நகரம் ஒன்றினையும் வரண்ட வலயத்தில் அமைந்துள்ள நகரம் ஒன்றினையும் முறையே உதாரணமாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) மாத்தளை மற்றும் கண்டி
(2) கேகாலை மற்றும் இரத்தினபுரி
(3) காலி மற்றும் கம்பஹா
(4) வவுனியா மற்றும் ஹம்பாந்தோட்டை
(5) களுத்துறை மற்றும் மட்டக்களப்பு (......)

37. தென் ஆசியப் பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் (SAARC) மூன்று அங்கத்துவ நாடுகளை எடுத்துக்காட்டும் தெரிவு எது?
(1) பாகிஸ்தான், நேபாளம், பூட்டான்
(2) இந்தியா, பங்களாதேஷ், மியன்மார்
(3) நேபாளம், பூட்டான், லாவோஸ்
(4) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், உஸ்பெகிஸ்தான்
(5) ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஓமான் (......)

More Papers & Online Exams
www.Edukinniya.lk

38. கைத்தொழில்களின் அமைவிடத்தினை எடுத்துக்காட்டும் நான்கு மரபு ரீதியான காரணிகள்,
(1) மூலப்பொருள், சக்திவலு, காலநிலை மற்றும் கல்வி
(2) உழைப்பு, மூலப்பொருள், சக்திவலு மற்றும் முதல்
(3) குடித்தொகை அடர்த்தி, சக்திவலு, மூலப்பொருள் மற்றும் உழைப்பு
(4) சக்திவலு, உழைப்பு, காலநிலை மற்றும் தொழில்நுட்ப அறிவு
(5) உழைப்பு, போக்குவரத்து, கல்வி மற்றும் முதல் (......)

39. பெரு நகரமொன்றின் (mega city) குடித்தொகைப் பருமன் எவ்வளவு?
(1) 10 மில்லியனுக்கு மேல்
(2) 1 மில்லியனுக்கு மேல்
(3) 1-10 மில்லியனுக்கு இடையிலாகும்
(4) 5 மில்லியனுக்கு மேல்
(5) 500 000 இற்கு மேல் (......)

40. நாடொன்றின் இடப்பெயர்வின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் ஆரம்ப நிலையின் தள்ளுவிசைக் காரணி ஒன்றையும், சென்றடையும் இடத்தின் இழுவிசைக் காரணி ஒன்றையும் முறையே எடுத்துக்காட்டும் தெரிவு எது?
(1) அதிகளவான வாழ்க்கைச் செலவு மற்றும் பிரயாணத் தடைகள்
(2) அமைதியான சூழல் மற்றும் சூழலியல் அனர்த்தங்கள்
(3) வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களின்மை மற்றும் சுதந்திரமான வாழ்க்கை
(4) குறைந்தளவான வாழ்க்கைச் செலவு மற்றும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களின்மை
(5) சாதகமற்ற அரசியல் சூழ்நிலை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் (......)

※ ※



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி II இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
※ பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
※ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைதற்தாள் இரண்டும், வரைபுத் தாள் ஒன்றும் வழங்கப்படும்.

## பகுதி II

1. இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த மகியங்கனை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகள் 20 மீற்றர் இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது. இப் படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

குறிப்பு :
※ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உப பிரிவுகளின் இலக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
※ **இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
※ உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) நாற்பக்கல் Ⓐ இல் எடுத்துக்காட்டப்படும் பௌதிக அம்சத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) Ⓒ - Ⓓ கோட்டினால் குறித்துக் காட்டப்படும் இடவிளக்கவியல் அம்சத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(iii) படப் பகுதியில் இனங்காணக்கூடிய **இரண்டு** பிரதான வடிகால் பாங்குகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) நாற்பக்கல் Ⓑ இல் காணப்படும் நெல் வயலினை 1:12 500 அளவுத்திட்டத்தில் மீளவும் வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

(v) படப் பகுதியிலுள்ள நீர்த்தேக்கமொன்றில் குறிக்கப்பட்டுள்ள நிர்வாக எல்லையினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(vi) படப் பகுதியில் காணப்படும் அரசாங்க நிறுவகங்களில் ஏதாவது **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vii) (a) படப் பகுதியில் காணப்படும் குடியிருப்புகளின் பரம்பல் பாங்கினை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(b) குடியிருப்புக்களின் பரம்பல் பாங்கில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(viii) படப் பகுதியின் விவசாய நிலப்பயன்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** பௌதிகக் காரணிகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

2. தரப்பட்டுள்ள உலகப் படத்தில், வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(1) • சென்னை
(2) • சாக் கடல்
(3) • கிறீன்விச் நெடுங்கோடு
(4) • சாம்பசி ஆறு
(5) • பனாமா கால்வாய்
(6) • கம்சட்கா குடாநாடு
(7) • அப்பலாச்சியன் மலைத்தொடர்
(8) • குறோசிவோ நீரோட்டம்
(9) • 2022 ஆம் ஆண்டில் உயர்ந்தளவான மானிட அபிவிருத்திச் சுட்டெண் (HDI) பெறுமானத்தினைக் கொண்டிருந்த நாடு
(10) • 2023 ஆம் ஆண்டில் 15 ஆவது பிறிக்ஸ் (BRICS) உச்சி மகாநாடு இடம்பெற்ற நகரம் (10 புள்ளிகள்)

## பகுதி III

3. (i) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையில் பயன்படுத்தப்படும் வழிகண்டறிதல் (Navigation) செய்மதிகளின் இரண்டு பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் மூன்று அடிப்படைக் கூறுகளைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(iv) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் மூன்று பயன்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) ஆய்வாளர் ஒருவரினால் முதனிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஏதாவது நான்கு முறைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே 4 (i) இல் நீங்கள் குறிப்பிட்ட முறைமைகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து, அதன் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம்நிலைத் தரவு மூலமாகக் கருதப்படும் இடவிளக்கப் படத்தின் இரண்டு அனுகூலங்களைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) இரண்டாம்நிலைத் தரவுகளில் காணப்படும் உள்ளார்ந்த குறைபாடுகள் இரண்டினைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
www.Edukinniya.lk

5. அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை 1 : க.பொ.த (உயர் தரப்) பரீட்சை - 2022 இன்படி மாவட்ட அடிப்படையில் கலைப் பிரிவில் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை.

| மாவட்டம் | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| மன்னார் | 504 |
| வவுனியா | 509 |
| திருகோணமலை | 1356 |
| பதுளை | 2981 |
| முல்லைத்தீவு | 477 |
| நுவரெலியா | 2103 |
| மொனராகலை | 1556 |
| யாழ்ப்பாணம் | 1859 |
| கிளிநொச்சி | 495 |
| கேகாலை | 2801 |
| புத்தளம் | 1988 |
| மட்டக்களப்பு | 1980 |
| அம்பாறை | 2474 |

| மாவட்டம் | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| மாத்தளை | 1745 |
| பொலநறுவை | 1152 |
| அனுராதபுரம் | 2807 |
| குருநாகல் | 5497 |
| இரத்தினபுரி | 3318 |
| கண்டி | 4010 |
| மாத்தறை | 2297 |
| களுத்துறை | 2936 |
| கம்பகா | 4234 |
| ஹம்பாந்தோட்டை | 1804 |
| கொழும்பு | 3684 |
| காலி | 2983 |
| தீவு முழுவதும் | **57550** |

*மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், இலங்கை - 2023*

(i) மேலேயுள்ள தரவுகளைப் பயன்படுத்தி, வகுப்பு ஆயிடைகள் மற்றும் மீடிறன்களைக் காட்டும் அட்டவணை **ஒன்றினைத்** தயாரிக்குக. (வகுப்பு ஆயிடை 1200 ஆகக் கருத்திற் கொள்க. வகுப்பு ஆயிடையின் ஆரம்பப் புள்ளி பூச்சியமாக இருத்தல் வேண்டும்.) (02 புள்ளிகள்)

(ii) மேலே 5 (i) இல் உம்மால் தயாரிக்கப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்தி மீடிறன் பல்கோணியினைக் கொண்ட இழைவரையம் **ஒன்றினை** அமைக்குக. (இதற்காக வரைபுத்தாளினைப் பயன்படுத்துக.) (07 புள்ளிகள்)

(iii) உம்மால் வரையப்பட்ட வரைபிலிருந்து அறிந்துகொள்ளக் கூடிய முனைப்பான அம்சங்கள் **நான்கினைப்** பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

6. 2021 இல் இலங்கையில் இறக்குமதிகளின் சேர்க்கையை எடுத்துக் காட்டும் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை 2 : 2021 இல் இலங்கையில் இறக்குமதிகளின் சேர்க்கை (US $)

| இறக்குமதிகளின் சேர்க்கை | பெறுமதி (மில்லியன் US $) |
|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 5977 |
| இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 3976 |
| கனிய வள எரிபொருள், உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் அவை சார்ந்த பொருட்கள் | 3743 |
| இரசாயன மற்றும் தொடர்புபட்ட உற்பத்திகள் | 2848 |
| உணவு மற்றும் வாழும் விலங்குகள் | 2275 |
| எரிபொருட்கள் தவிர்ந்த பண்படுத்தப்படாத பொருட்கள், உண்ணத்தகாதவை | 585 |
| ஏனையவை | 1333 |
| **மொத்த இறக்குமதிகள்** | **20637** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை, 2022, தொகுதி I

(i) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி, 2021 இன் இலங்கைக்கான இறக்குமதிகளின் சேர்க்கையை எடுத்துக் காட்டுவதற்கு பிரிக்கப்பட்ட வட்ட வரைபு (பை வரைபு) ஒன்றினை வரைந்து காட்டுக. (08 புள்ளிகள்)

(ii) நீர் வரைந்த வரைபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் இறக்குமதிகளின் சேர்க்கையில் காணப்படும் மூன்று முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தக் கூடிய வேறொரு வரைபு முறையினைப் புனையா வரைபடங்களுடன் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

* * *

More Papers & Online Exams
www.Edukinniya.lk




අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

22 I

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර් 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Interval 20 metres